என்று மக்கள் மாற்றி விட்டார்கள் என்று லேசாகப் பேசிக் கொள்கிறார்கள். அது உண்மையான விஷயம் அல்ல. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகு கூட பொதுமக்கள் சம தர்மம் தங்களுக்குக் கிட்டவில்லை என்ற எண்ணத்திலே இந்த ஆட்சியை விலக்கி, சமதர்மத்தின் பலனைத் தங்களுக்குக் கொடுக்க வேறு கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்திப் பார்க்க வேண்டு மென்று ஆசைப்பட்டார்கள். காரணமின்றி, வகையான மக்க ளாட்சி செய்துவந்த கட்சியை அகற்றிவிட்டு புதிதாக ஒரு கட்சியை அரசு பீடத்தில் அமர்த்தி விட்டார்கள் என்று சொல்வது பொருந்தாத விஷயம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இன்னொரு காரணத்திற்காக மக்கள் இதுகாறும் ஆண்டு வந்த கட்சியை அகற்றி விட்டார்கள் என்பதாக பத்திரிகைகளிலே ஆராயப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் கட்சியினரே ஆராய்ந்து வருகிறார்கள். ஆனால் உண்மையை யாருமே புரிந்துகொள்ள வில்லை என்றுதான் நான் எண்ண வேண்டியிருக்கிறது. மக்களுக்கு இருந்த குறைகளை நிவர்த்தி செய்யமுடியவில்லை; நிவர்த்திக்கப்பட வில்லை என்ற காரணத்தினாலே மக்கள் அந்தக் கட்சியை அகற்றி விட்டார்கள் என்பது நமக்குத் தெரிகிறதே தவிர என்னென்ன துறைகளிலே அவர்களுக்கு அந்த ஆட்சியின் பலன் கிட்டவில்லை என்பதை ஆராய்ச்சியின் மூலமாகத் தெரிந்துகொள்ளவில்லை.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் வைத்த பின்னும் கூட நாட்டில் விவசாயிகள் பழையமாதிரியிலேயே இருந்து வந்தார்கள். “நாலாறுமாறாக நனி சிறிதாக எப்புறனும் மேலாரும் மேலுரை சோரும் வீடு” என்று சொல்வதுபோல குடிசைகள் குடிசைகளாக இருந்து வந்தன. இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பலன் யாரிடமோ போய் பரிணமித்துக்கொண்டிருக்கிறதே தவிர ஏழை மக்களுக்குப் பயன்படவில்லை. அவர்கள் எப்பொழுதும்போல ஏழ்மையிலும், வறுமையிலும் கஷ்டப்பட, அவர்கள் அடைய வேண்டியதன் பலனை வேறு யாரோ அடைய இந்தத் திட்டங் களினால் தங்களுக்குப் பலன் கிட்டாது என்ற முடிவுக்கு வந்து இந்தத் திட்டங்கள் இட்ட ஆட்சியானது இன்னும் இரண்டு திட்டங்கள் இட்டாலும், திட்டங்களில் பலன்கள் ஏழை விவசாயி களாகிய தங்களுக்குக் கிட்டாது; நாம் நல்ல பலன்களை அடைய முடியாது என்ற முடிவுக்கு வந்ததன் காரணமாக இன்று அந்த ஆட்சியை விலக்கி விட்டார்களே தவிர வேறொன்றுமில்லை. சென்ற தேர்தலிலே இங்கு விலக்கப்பட்ட கட்சியினர் பிரச்சாரத்திற்குச் செல்லும் நேரத்திலே கூட்டங்களில் இருக்கும் பாட்டைத் தலை பிள்ளையின் தலையைத் தடவி ‘ஐயோ மக்களே, மூன்று ஐந்தாண்டு திட்டங்களினால் உங்கள் தலைக்கு எண்ணெய் கொடுக்க வேண்டு மென்று எண்ணினோம். ஆனால் இட்ட திட்டமெல்லாம் உன் தலைக்கு எண்ணெய் கூடக் கொடுக்கவில்லை. ஆகவே, உன் தலைக்கு எண்ணெய் கொடுக்க இன்னொரு முறை எங்களுக்கு வாக்குக் கொடுக்க வேண்டுமென்று உன் பெற்றோர்களிடம் சொல்' என்று கேட்கும்படி ஒரு அவல நிலை ஏற்பட்டதை நாம் அறிவோம்.

இப்படியாக பரட்டைத் தலை பிள்ளைக்கு ஒரு திட்டம், கன்னம் ஒட்டிய பிள்ளைக்கு ஒரு திட்டம் என்று புதிதாகத் திட்டங்களை யிட்டு, இனிமேல் செய்கிறோம் என்று சொன்னார்களே தவிர இட்ட திட்டங்களின் பலனை அனுபவிக்க வேண்டியவர்களுக்கு ஏன் கிட்ட வில்லை என்ற ஆராய்ச்சியில் இறங்கவில்லை. அதன் காரணமாக மக்கள் மனச்சோர்வுற்று, இவர்கள் மூலம் இந்தப் பலன்கள் நமக்குக் கிட்டாது; ஜனநாயக ரீதியிலே இந்த ஆட்சியை மாற்றினா லொழிய நாம் பலன் அடைய முடியாது என்று இந்த ஆட்சியை மாற்றி விட்டார்கள்.

ஆகவே, இன்றைக்கு ஆட்சி புரியும் கட்சியினர் என்ன காரணத் துக்காக மக்கள், காங்கிரஸ் சர்க்காரை மாற்றினார்கள் என்பதை ஆராய்ந்து, மக்கள் குறைகள் என்ன, நிவர்த்திக்கப்படாமல் இருப்பவை எவை, பூர்த்தி செய்யப்படாமல் இருந்த தேவைகள் என்ன, என்பதை ஆராய்ந்து செயல்பட வேண்டும். இன்றைக்கு இங்கு புதிதாக இந்தச் சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை மக்களுக்கு எந்த வகையிலே, அவர் களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றி இருக்கிறது என்று பரிசிலிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நிறைவேற் றப்படாமல் இருந்த சில திட்டங்களை நிறைவேற்றுவதற்குத்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிதாக எந்த ஒரு பெரிய ஏற்பாடும் செய்யப்படவில்லை. காரணம் என்னவென்றால் புதிதாக வந்த சர்க்கார் அதற்கான மூலதனத்தைத் தேடி புதுத் திட்டங் களைத் தீட்டுவதற்கான நிலையில் இல்லை. இதுவே குறைந்த வருமானத்தைக்கொண்டு துண்டு விழாமல் சமர்ப்பிக்கப்பட்டிருக் கிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தை மக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில் தயாரித் திருப்பதை நான் வரவேற்கிறேன்.

ஆனால், இதை வரவேற்கும் பொழுது சில விஷயங்களை நான் இந்தச் சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சர்க்காருக்கும், இந்த நாட்டுக்கும் அடிப்படையான பலம் விவ சாயப் பெருமக்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. விவசாய பெருமக்களுக்குப் போதுமான வசதியைச் செய்து கொடுக்காத எந்தச் சர்க்காரும் நீண்ட நாள் ஆட்சி செலுத்த எண்ணுவதில் பிரயோசனம் ஏற்படாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். விவசாய மக்கள் என்றால் தஞ்சாவூரிலே பாசன வசதி காரணமாக விவசாயம் செய்யும் மக்களை மனத்திற்கொண்டு, எண்ணிவிடக் கூடாது. இரு மாடு, ஓரேறு என்று வைத்து விவசாயம் செய்யக் கூடியவன் 20 எக்கரா நிலம் வைத்து உழ முடியும், வேறு பிரதேசங் களிலே. ஒரு ஏர் வைத்திருக்கும் உழவன், தானும், தன்னுடைய மனைவியும், தன்னுடைய பிள்ளைகளும் ஆக எல்லோருமாகச் சேர்ந்து காட்டிலே வேலை செய்து, வீட்டிலே வேலை செய்தால்தான் விவசாயத்தை ஓரளவு நடத்தித் தன்னுடைய வயிற்றையும் வளர்த்து ஏதோ வாழ முடியுமே தவிர நல்லபடியாக வாழ முடியும்